2003 ஏப்ரல் 24]

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நிதிநிலைமைக்கேற்ப செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே அதைச் செய்தால், அது சென்னையினுடைய நெரிசலைக் குறைப்பதற்கு; தொழிற்சாலைப் பகுதியாக இருக்கிற திருப்போரூர், சோழிங்கநல்லூர், திருவான்மியூர் போன்ற பகுதிகளுக்கு, நெடுந்தூரத்திலிருந்து, தென் மாவட்டங்களிலேயிருந்து வரும் வாகனங்கள் செங்கல்பட்டிலேயிருந்து திருப்போரூர் வழியாகச் செல்வதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, அதற்காக நம்முடைய அமைச்சர் அவர்கள், முன்னுரிமை அடிப்படையிலே இந்த ஆண்டே அதை எடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப மேம்பாடு செய்யப்படும் என்று சொன்னேன். வரும் நிதியாண்டு என்றால், இந்த ஆண்டும் சேரும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 302, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

302—

மேம்பாலம்

***9813—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி-பெரியகுளம் நெடுஞ்சாலையிலும், தேனி-மதுரை நெடுஞ்சாலையிலும் இரயில்வே இருப்புப்பாதை, சாலைகளின் குறுக்கே செல்வதால், அவ்விடங்களில் மேம்பாலங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS

[2003 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசின் ஆய்வில் உள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேனி நகரம் மாவட்டத்தின் தலைநகராகவும், தமிழகத்தின் முக்கியமான ஒரு வர்த்தக மையமாகவும் இருப்பதால், ஆண்டிற்கு 6 இலட்சம் டன் சரக்குகள் தேனி மார்க்கெட் மூலம் கையாளப்பட்டு வருகின்றன. மேலும் தேனி மாவட்டத்திலுள்ள தேனி, பெரியகுளம், போடி, சின்னமனூர், கம்பம் ஆகிய ஐந்து நகராட்சிகளும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் தொகுதியான ஆண்டிப்பட்டி, உத்தமபாளையம், தேவாரம், கூடலூர் போன்ற டவுன் பஞ்சாயத்துகளும் முக்கிய வர்த்தக மார்க்கெட்டுகளாக விளங்கி வருகின்றன. அந்தச் சரக்குகளைக் கையாளும் வர்த்தகர்களின் வர்த்தகம் தற்போது தேனியின் மையப் பகுதியான தேனி-பெரியகுளம் சாலையில் போக்குவரத்து மூலமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. தேனி-மதுரை சாலை, தேனி-குமுளி சாலை, தேனி-போடி சாலை, தேனி-திண்டுக்கல் சாலை ஆகிய முக்கிய சாலைகளை மேம்பாடு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும், தேனி நகரில் போக்குவரத்து நெரிசல் கூடுதலாக இருப்பதால் தேனி-பெரியகுளம் சாலையிலுள்ள இரயில்வே மேம்பாலத்தினைத் துரிதமாகச் செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேனி நகரில், தேனி-பெரியகுளம் மாநிலச் சாலை கிலோ மீட்டர் 72/8-லும், தேனி-மதுரை தேசிய நெடுஞ்சாலை கிலோ மீட்டர் 75/8-லும் இரண்டு இருப்புப்பாதைகள் குறுக்கிடுக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த இரயில்வே மேம்பாலத்தைப் பற்றி, அதன் அவசியத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். வரும் நிதியாண்டில்,

2003 ஏப்ரல் 24]

நிதிநிலைமைக்கு ஏற்ப அரசு அதனை ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை-தேனி நெடுஞ்சாலையில் உசிலம்பட்டி தொகுதியும், ஆண்டிப்பட்டி தொகுதியும் சந்திக்கின்ற இடமாகிய ஆண்டிப்பட்டிக் கணவாயில் இரயில்வே gate ஒன்று இருக்கிறது. அந்தச் சாலை மிகவும் வளைவுகள் உள்ள சாலையாக இருக்கிறது. அது மலைப் பாதையாகவும் இருக்கிறது. அந்த இடங்களிலே அந்த வளைவுகளின் காரணமாக, மிகப் பெரிய விபத்துகள் எல்லாம் அடிக்கடி நடந்து கொண்டு இருக்கின்றன. அந்தச் சாலையை நேர் செய்து அங்கே இருக்கின்ற அந்த இரயில்வே gate-ன் அருகிலும் மேம்பாலம் கட்டுவதற்கு அரசு முன்வருமா? அதேபோல, அதே சாலையில் செக்கானூரணி என்ற இடத்திற்கு மேற்காக, இந்த இரயில்வே லைன் குறுக்கீடுகள் இருக்கின்றன. அதுவும் தேசிய நெடுஞ்சாலை என்கின்ற காரணத்தினால், அங்கு வாகனப் போக்குவரத்து மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கேயும் ஒரு இரயில்வே மேம்பாலம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டிக்கும், உசிலம்பட்டிக்கும் இடையில் இருக்கின்ற அந்த மலைப் பாதை வளைவுகள் நிறைந்ததாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக் கூறினார்கள். அந்த வளைவுகள் வரும் ஆண்டில் சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். மேலும், ஆண்டிப்பட்டிக் கணவாயில் இருக்கின்ற இருப்புப்பாதை கடவுபாதை பற்றியும், செக்கானூரணியில் இருக்கின்ற இரயில்வே மேம்பாலப் பணியைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கு ஏற்ப அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.